# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60 தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2008 | ற. ஆகிர்13 | பங்குனி 21 (3-4-77) ஞாயிறு | புத்தகம்31 இதழ் 99


## மூதறிஞர் நலன் வேண்டி நாடு முழுவதும் பிரார்த்தனை!

### ஆயிரம் கோவில்களில் விசேட ஆராதனை!

மூதறிஞர் தந்தை செல்வா அவர்களுக்கு நலனும் பெலனும், நீடித்த ஆயுளும்வேண்டி அவரது 80வது பிறந்த நாளான மார்ச் 31ம் நாள் நாடு முழுவதிலுமுள்ள சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆலயங்களில் விசேட பூசைகள், பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

அதே சமயம் யாழ் மருத்துவ மனையில் இருந்துவரும் தந்தை செல்வாவின் உடல் நிலையில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மூதறிஞர் தந்தைசெல்வா அவர்களுக்கு 31-3-77 79வயது நிறைவுபெற்றது. அன்றைய தினம் யாழ் மருத்துவமனையில் இருந்தபடியே தந்தை செல்வா 80வது வயதில் அடி எடுத்து வைத்தார். தந்தை செல்வாவின் பிறந்த நாள், தமிழர் வாழுமிடமெங்கும் பிரார்த்தனை நாளாக அனுட்டிக்கப்பட்டது. மூதறிஞர் அவர்கள் சீக்கிரம் குணமடைய வேண்டியும், அவர் நலனும் பெலனும் பெற்று வாழவும், அவருக்கு நீடித்த ஆயுள் வேண்டியும் தமிழ் பேசும் மக்கள் நாடு முழுவதிலுமுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆலயங்களில் கண்ணீர்மல்க பிரார்த்தனை நடத்திவேண்டுதல் செய்தனர்.

தமிழ் ஈழத்தில் உள்ள ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள ஆலயங்களில் எல்லாம் விசேட பூசைகள், பிரார்த்தனைகள் இடம்பெற்றன. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரம், நல்லூர்கந்தசுவாமி கோவில், வண்ணார்பண்ணை சிவன்கோவில், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயம், மடுமாதா திருப்பதி, செட்டிகுளம் புனித அந்தோனியார் கோவில் முன்னேஸ்வரம் ஆகிய ஆலயங்

—5-ம் பக்கம் பார்க்க

● குமாரசூரியரிடம் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி

# குமரிப் பெண்ணின் கற்பு சூறையாடப்பட்டதாம்!

## கிளிநொச்சியில் தரகர்கள் வெறியாட்டம்!

தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியர் அடுத்தபொதுத்தேர்தலில் போட்டியிடவிருப்பதாகச்சொல்லப்படும் கிளிநொச்சித்தொகுதியில் அமைச்சரின் எடுபிடிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் காடையர்களின் அட்டகாசம் மிகவும் மோசமாக அண்மைக் காலமாக நடைபெற்று வருவது தெரிந்ததே. இந்த வெறியாட்டத்தின் உச்சக்கட்டமாக அமைச்சர் குமாரசூரியரிடம் உத்தியோகம் பெற்றுத்தருவதாகக்கூறி ஒரு கன்னிப்பெண்ணை ஏமாற்றி அழைத்துச்சென்று அவளது கற்பை ஏழுபேர் சேர்ந்து சூறையாடிய மிருகத்தனமான கொடுமையொன்று நடைபெற்றிருப்பதாக தெரியவருகிறது.

இக்கொடூரச் சம்பவம் கிளிநொச்சி சுதந்திரக் கட்சி பணிமனை அருகே உள்ள ஒரு அறையில் நடைபெற்றதாகவும், அமைச்சரால் அண்மையில் நியமனம் செய்யப்பட்ட உபதபால் அதிபர் ஒருவரும் சுதந்திரக்கட்சி வாலிப முன்னணியின் தலைவர் என்று சொல்லப்படுபவருமான ஒருவரே இதன் பின்னணிக்கு காரணஸ்தர் என்றும் அவர் இப்போது தலைமறைவாகியுள்ளதாகவும்சொல்லப்படுகிறது.

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:—

கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து பொலிசார் சுதந்திரக்கட்சி அலுவலகத்தின் பக்கத்தே பூட்டப்பட்டுக் கிடந்த அறையின் ஒட்டைப் பிரித்து உள்ளே சென்று அங்கு ஐந்து தினங்களாக வைக்கப்பட்டிருந்த கன்னிப்பெண் ஒருவரை மீட்டெடுத்தனர். அமைச்சர் சூரியரிடம் வேலை பெற்றுத்தருவதாக கூறி தன்னை அழைத்துவந்த பாலச்சந்திரன் என்பவர் இந்த அறையில் தன்னை ஐந்து தினங்களாக வைத்திருந்தார் என்றும், மற்றும் அறுவரும் இத்தினங்களில் தன்னுடன் உடலுறவு கொண்டதாகவும் குறித்த பெண் வாக்குமூலம் அளித்தாராம்.

குறித்த கோஷ்டியின் கப்டன் என்று சொல்லப்படும் பாலச்சந்திரனும் சின்னக்கிளி பெரியகிளி எனப்படும் அபூர்வ சகோதரர்கள் இருவரும் அண்மையில் கிளிநொச்சியில் கூட்டணிக்கு எதிராக நடந்த கலவரங்களில் முன்னணி வகித்தவர்கள். வீடு புகுந்து வெறிக்கூத்தாடி ஒரு பெண்ணின் தாலிக்கொடியைஅறுத்தவர்களாம் கூட்டணியை சேர்ந்தோருக்கு தொல்லை விளைவித்ததால் அமைப்பாளராலும் வடபகுதி சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களாலும் தியாகி பட்டம் சூட்டப்பட்டு மாலை மரியாதைக்கு உட்படுத்தப்பட்டவர்கள். பாலச்சந்திரன் என்பவர் உபதபால் நிலையம் ஒன்றின் அதிபராகவும் சின்னக்கிளி, பெரியகிளி என்பவர்கள் செய்தியாளர்களாகவும் அமைச்சரால் தபால் திணைக்களத்தில் அமர்த்தப்பட்டவர்கள். அபூர்வ சகோதரர்களும் மற்றும் தபால் இலாகாவை சேர்ந்தவர்களான மூன்று வாலிபர்களும் பெண்ணால் அடையாளம் காட்டப்பட்டனராம். இவர்கள் மூவரும் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறது. கப்டன் பாலச்சந்திரன் தலைமறைவாகி விட்டார்.

—8-ம் பக்கம் பார்க்க



## சிவசிதம்பரம் பூரண சுகம்



தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் இப்போது பூரண சுகம் அடைந்து விட்டார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். எனினும் மேலும் சில நாட்களுக்கு அவர் ஓய்வு எடுக்கவேண்டுமென டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். இப்போது அவர் தமது இல்லத்தில் ஓய்வு எடுத்து வருகிறார். திரு. சிவசிதம்பரம் கொழும்பு அரசினர் மருத்துவமனையில் மூன்று வார காலமாக அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவரை பார்ப்பதற்கு எவரும் அனுமதிக்கப் படவில்லை.

# தந்தை செல்வாவை டாக்டர் கெப்ரால் மூன்றாவது தடவையாக பார்த்தார்!

## திருப்திகர முன்னேற்றம் இருப்பதாக அறிவிப்பு!

**இன்றுடன் பன்னிரண்டாவது நாளாக யாழ் அரசினர் மருத்துவமனையில் இருந்து வரும் மூதறிஞர் தந்தை செல்வாவின் உடல்நிலை திருப்திகரமான முறையில் முன்னேறி வருவதாக டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.**

தந்தை செல்வா, கால் கைகளை மடித்து நீட்டுகிறார். கண்களை அடிக்கடி திறந்து பார்க்கிறார். தும்முகிறார்; இருமுகிறார்; அவரது பழைய சட்டையை மாற்றி புதிய சட்டை அணிவதற்கு ஒத்துழைத்தார். உதடுகளை அடிக்கடி அசைக்கமுயற்சிக்கிறார். இவையெல்லாம் அவருக்கு அறிவு திரும்புவதற்கான குறிப்பிடத் தகுந்த முன்னேற்றங்கள் என்று டாக்டர்கள் தெரிவிக்கின்றனர். தந்தை செல்வா அவர்களுக்கு வெளியே அறிவு தெரியாவிட்டாலும், அவருக்கு உள்ளுணர்வு வேலை செய்ய ஆரம்பித்துவிட்டதென்றும், மற்றவர்கள் பேசுவதை கிரகிக்கும் சக்தி இப்போது அவருக்கு ஏற்பட்டுள்ளதென்றும் டாக்டர்கள் நம்புகின்றனர்.

தந்தை செல்வாவின் பிறந்த நாளான 31-3-77 வியாழக்கிழமை காலை அவரது நிலையை பரீட்சித்துப் பார்ப்பதற்காக அவருக்கு அறுவை சிகிச்சை செய்த மூளைநரம்பு சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் கப்ரால் மூன்றாவது தடவையாக கொழும்பிலிருந்து விசேட விமானத்தில் யாழ்ப்பாணம்சென்றார்.

தந்தை செல்வாவுக்கு இப்போது செலுத்தப்படும் உணவு அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. விட்டாமோல்ட் ஒத்துக்கொள்ளாததால் ஹார்லிக்ஸ் செலுத்தப்படுகிறது.

தந்தை செல்வாவை கடந்த புதன்கிழமை (30-3-77) டாக்டர்களின் விசேட அனுமதிபெற்று தமிழர் கூட்டணி செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் நேரடியாகப் பார்த்தார். தந்தையின் நிலை முன்னேற்றம் அடைந்து வருவதாகவும், அவரது முகத்தில் இருந்த வீக்கங்கள் இப்போது வற்றிவிட்டதாகவும், தந்தையைப் பார்த்த பின்னர் திரு. அமிர்தலிங்கம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி, மத, பிரதேச வேறுபாடுகளற்ற

'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்'' என்பது எம்மவரிடை நிலவும் முதுமொழி, இம் முதுமொழிக் கமைய தெய்வநம்பிக்கை தெய்வத்தை வாழ்த்தி நாம் எதில் ஈடுபட்டாலும்வெற்றி காண்பது உறுதி, ஆகவே தான் எம் கவிஞன் காசி ஆனந்தனும்—

'நாவினிக்க நெஞ்சினிக்க
என்னுடையாள் அடிநயந்து
மாவிளக்கின் ஒளியேற்றி
மலர் சொரிந்து கவிபொழி
வேன்''

என்று தன் கவிதை மழை பொழிவதற்கு கடவுள் துணையை நாடி நிற்பதை நாம் காண்கிறோம். தன் கவிதை பெருக்கெடுக்க கடவுளை வேண்டி நிற்கும் இக் கவிஞன், தமிழ் ஈழம் அமைக்க புறப்படுகையில் கூட தெய்வம் வாழ்த்திப் புறப்பட மறக்கவில்லை. எனவேதான்.

''தெய்வம் வாழ்த்திப்
புறப்பட்டேன்
தேசம் அமைக்கப்
புறப்பட்டேன்''

என அழுத்தம் திருத்தமாக தன்தெய்வ நம்பிக் தாய் இவள் விளங்குகிறாள் என்பதை உணர்ந்த நிலையிலும் தமிழை மறந்து மதங்களின் பேரில் முட்டிமோதுதல் எவ்வளவு அறிவீனம் எனக் கவிஞன் இடித்துரைப்பது எவ்வளவு பொருள் பொதிந்த கூற்றாக விளங்குகிறது.

### தமிழால் வழிபடும் கவிஞன்

மதங்கள் கடந்த நிலையில் பேரொளிப் பிழம்பாக விளங்கும் இவ்விறைவனை எம் மொழியில் எம்மவர் வழிபட வேண்டும் என்ற கேள்வி எழுகின்றபோது அதற்கும் எவரும் ஏற்கும் முறையில் விடை பகர்வதுபோல் தெய்வம் கொடுத்த அமுதாய்' எம் சின்னவயதில் தெய்வத்தை நாங்கள் தெரியவைத்த மொழியாய் விளங்குவது எம் தமிழ்மொழியே.எனவே இன்பத் தமிழால் இறைவனைப்பாடி அன்பைப் பெருக்குவதினால் பயன் உண்டென்பதை

''தெய்வ லத்தீன்மொழி
தேவையோ — ஏடா
தேம்பாவணி கசப்போ?
செய்ய குர்ஆனின் அரபுதான்
—நன்றோ

''காட்டு மரங்களிலே
கள்ளர் மரம் ஐயர்மரம்
தோட்டி மர முண்டோடா
தோழா?
நாட்டு மனிதரிலே
வேற்றுமைகள் காட்டுகிறாய்..
நட்ட மரம் உன்னைவிட
மேலா?

**நாளை திங்கட்கிழமை (ஏப்ரல் 4) தமிழ் ஈழத்தின் அரசவைக் கவிஞர் காசி ஆனந்தனின் 39வது பிறந்த நாளாகும். அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. —ஆர்.**

என்று கேட்கும் கேள்விக்கு எம்மவர் என்னவிடைதான் பகரமுடியும்?

### பிரதேச வெறிக்கு வேட்டு

சாதி வெறியைச் சாடி சமத்துவம் நிலவச்செய்யும் எம் கவிஞன், சமயங்களிலே பொது நோக்கினை நிலைநாட்டும் நம் கவிஞன் மாகாண பிரதேச வெறிக்கு எம்மவர் ஆளானால் ஏற்படக்கூடிய

பொன்னுளொன்று
புலர்ந்தது கண்டீர்!
புதிய தமிழ்க்குலம்
பூத்தது மாதோ!

என்று கவிஞன் பகர்கின்ற பாங்கு மாகாணம் கடந்த நிலையில் தமிழ்ஈழ மண்ணைக் காக்க எம்மைத் தூண்டுகிறது.

### வயிறு வளர்ப்போருக்கு வசை பாடுபவன்

சாதியைச்சாடி,சமயத்தில் சமரசம், கண்டு மாகாண வெறியை புதைகுழியில் புதைத்து தமிழ் இனத்திற்கு புதுவாழ்வு காண முனையும் நம் கவிஞன் தமிழ் மானத்தை விற்று வயிறு வளர்ப்போரால் வரும் கேடுகளையும் வேல் கொண்டு தாக்குகிறார். இதோ அவர் வேல்கொண்டு தாக்கும் சொற்கள்.

''பிச்சையுண வொன்றே பெரி
தென்பான் வயிறுடையான்!
எச்சில் வருமெனினும் தமிழ்
இனத்தை விலை வைப்பான்!
நச்சு மகன் குடிகேடன்
நன்றியிலாப் பாவி...
உச்சி பிளந்திடுவீர்! இவன்
ஒழிந்தால் விடிவுண்டே!''

கங்களை மனத் துணிவோடு ஏற்று போரிடுகின்றபோது தான் வெற்றி எம்மை அறவழியில் வந்து அடையும் என்பதை—

''மற்றோர் தரும் துயர்தனை
யேற்றல்
எனினும் மனந்துணிந்து
குற்றங் குற்றமே எனத்
திங்கை
எதிர்த்துக்குமுறி நிற்றல்
சற்றேனும் பிறரை
வருத்தாமல்
தமையே வருத்திப்போரில்
வெற்றி அறவழியில்
விளைந்திடுதல்
எனுமோர் தெய்வ வேலை',

என்று சால்ப— சாற்றுகிறார் நம் கவிஞர். வேறு சொற்களில் விளம்பின் எம்விடுதலைப் போரின் வெற்றி எம் தாங்கும் சக்தியிலேயே தங்கியிருக்கிறது. இதனைத்தான் ''war of endurance'' என்று ஒரு அயர்லாந்து தேசபக்தன் செப்பிச் சென்றான்.

உயிர் நமக்கு வெல்லமல்ல உணருவாய் நற் தமிழனே! என்று முழங்கி உயிரை துச்சமென மதித்து உரிமைப் போர் நடாத்தும் எம்மை மிகக் கொடிய விதியெனும் கிழவி பேச்சுவார்த்தை என்றபேரில் எம்மை அலையச் செய்வாள்-எம் இயக்கத்துள் தேவையற்ற பகையை-உட்பூசலை வளர்க்க முயல்வாள். ஆனால் காலப்போக்கில் இவள் நலிந்து மிக மெலிவாள் மீண்டும் தமிழ் இனம் தலைதூக்கும்! தமிழ் ஈழம் மலரும் என்று எம் நிலையை கூர்ந்து கவனித்து பொறுப்புணர்ச்சியோடு கருத்துக்களைத் தரும் எம் கவிஞன், இனி எம் அருந் தமிழ் மண்ணில் அங்குலமும் அயலவன் கால்வைக்க முடியாத நிலையில் தமிழன் வாழ

# சுதந்திரத் தமிழ் நாடு உருவாகவேண்டும்!



கையை தெளிவுபடுத்துகிறார். தெய்வத்தை நம்புகிறோம் நாம். தெய்வத்தை நம்புகிறான் இக் கவிஞன். ஆகவே தெய்வத்தை நம்பும் இக்கவிஞர்களைநம்பும்நமக்கு நல்வாழ்வு உண்டென்பதில் எதுவித ஐயமும் இல்லை.

தெய்வ வழிபாட்டை வலியுறுத்தும் இக்கவிஞன் உன் தெய்வம் — என்தெய்வம் என்று எம்மவர் போரிட்டு அழிவதைத் தடுக்கும் முறையில்,

''எல்லா மதங்களுந்
தெய்வத்தை—நாடும்
இன்ப வழிகளடா!
நல்ல நினைவுகள் நெஞ்சினில்
—வந்தால்
நாயகன் நம்மிறைவன்
எல்லாம் வழங்குவா
னென்பதே—மார்க்கம்''

என்று சமயப்பொதுமை சாற்றி உண்மைக் கடவுள் இயல்பை இயம்பி நிற்பதைக் காண்கிறோம்.

மாறுபடும் மதங்களால் எம்மவர் மோதிட்டு அழிவதை மேலும் தடுக்கும் முறையில் ''உள்ள மதங்கள் அனைத்தும் இந்த உலகில் வரும் முன்னே — தெள்ளு தமிழ் மகள் வந்தவள் என்று தெரிந்த பின்பும் —கொள்கை நீதிகளின் உறைவிடமாய் தெய்வம்கொடுத்த அமு

சீரு வெறுத்ததோடா?
சைவம்பேச சமஸ்கிருதம்
—தானோ
சம்பந்தர் தீயவரோ?
வையகத்தில் மனம்
வளர்க்கும்—சொந்த
வாய்மொழி காத்திடடா! என்ற பாடல் வாயிலாக சுவைபட சுட்டிக்காட்டுகிறார். இறைவழிபாடு இன்பத் தமிழில்—தாய்மொழியில் அமைகின்றபோதுதான் இதயத்தை ஈர்க்கின்ற தன்மை உள்ளொளி பெருக்குகின்ற தன்மை ஏற்படுகிறதென்பதை எவ்வளவு பகுத்தறிவு உணர்வோடு உணர்த்திச் செல்கிறார் நம் கவிஞர்.

### சாதி வெறியைச் சாடியவர்

தமிழ் இனத்தை சாகடிக்கும் மற்றையதோர் சாபக்கேடு சாதி வெறியாகும். இச் சாதி வெறியை இக் கவிஞன் சாடுகின்றமுறை ஏனைய கவிஞர்களை மிஞ்சுகின்ற முறையில் அமைகிறது "ஏடா? உண்டோடா சாதி? எவன் வைத்த சட்டம்? உணர்க நீ... தமிழ் நாடு துண்டுதுண்டானால் தோல்விதான் மிச்சம்!'' என்று எச்சரிக்கின்ற பாங்கு எவர் உள்ளத்தையும் தொடும் தன்மையுடையது. அவர் எம் அறியாமையை மேலும் சாடுகின்ற முறையில்—

விளைவுகளை பின்வரும் முறையில் எச்சரிக்கிறார்.

"மட்டக்களப்பும் யாழ்நகர்
மண்ணும்
மரபில் வேறுபட்டவை
யென்றொரு
குட்டித்தலைவன் குழப்புவா
னங்கே...
குன்றஞ் சூழ்ந்த
மலைநாட்டானை
திட்டுவானொரு சிறுமகன்...
மன்னர்
திருமலையெனச்
செந்தமிழ்க் கூட்டம்
எட்டுப்பத்தாய்ப் பிரிந்தது
மாற்றான்
இருந்த களத்தில் எரிந்தது
நெஞ்சே!''

மேற்குறித்த முறையில் மாகாண வெறிக்கு ஆளாகி மடிந்தொழியாது தமிழ்ஈழ மண்ணை — அருந்தமிழ் மண்ணை எப்படியும் காப்பாற்ற வேண்டும், அப்படிக் காப்பாற்றுகின்றபோது புதிய தமிழ்க்குலம் பூக்கும் என்பதினை—

''அன்னை மண்ணை
அருந்தமிழ் மண்ணை
அள்ளி வலக்கை
யதனால் எடுத்தே
சின்ன முத்தமொன்று
கொடுத்துச்
செருவிலாட வருவீர்
தோழரே!
இன்னுமின்னும்
எளிய வேற்றுமை
இயம்புவீரோ? என
நானுரைத்தேன்!

தான் உயர்வு பெறுவதெனில் தாள்பிடித்து தன் மனைவியையும் விற்கத் தயங்காத இவ் வீண் பிறவிகள் முற்றாக ஒழிக்கப்பட்டால் தான் தமிழ் இனம் தூய்மையுற்ற இனமாக துலங்க முடியும் என்பது கவிஞரின் முடிந்த முடிவு. சொல்லப் பயன்படுவோர் சான்றோர் கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்'' என்ற வள்ளுவர்

## உணர்ச்சிக் கவிஞரின் எழுச்சிக் கவிதைகள் தமிழினத்துக்கு வழிகாட்டுகின்றன

வாய்மொழியும்இவ்வுண்மையையன்றோ வலியுறுத்துகிறது.

### தாங்கும் சக்தியிலேயே தமிழனுக்கு வெற்றி

காட்டிக் கொடுக்கும் கயவர் கூட்டம் ஒழிக்கப்பட்ட நிலையில் தமிழ் இனம் தூய்மையுற்று தெளிவுபெற்று துணிவோடு போர்க்களத்தில் குதிக்கின்றபோது வெற்றி நமதாய் அமையும் என்பது நம் கவிஞரின் நம்பிக்கை இப்போராட்டத்தின் இறுதி வெற்றி. எம் தாக்குதல்களுக்கு மேலாக நம்மைத் தாக்குகின்ற தாக்

தங்கத் தமிழ் ஈழம் மலர்ந்த மாண்பினை பின்வரும் முறையில் வாயார வாழ்த்துகிறார்.

### தமிழ் ஈழம் விழாக்கோலம் பூணுகிறது

"கோயில்களெங்கணும்
மணியொலி கொஞ்சின!
தமிழ் மனம்
குளிர்ந்தடா!
போயின ஊர்வலம்!
வீடெலாம் பொன்விழா!
பூத்தன நிறைகுடங்கள்!
ஆயிரம் எழில்வகை!
விடுதலைநாளெனில்
அழகொடு காட்சியன்றோ?
வாயிதழ் எங்கணும்
வாழ்த்தொலி நின்றது!

வாழிய ஈழத்தமிழ் நாடே! நாமும், தோன்றவிருக்கும் தமிழ்ஈழத்தின் அரசவைக் கவிஞனாய் விளங்கவிருக்கும் காசிஆனந்தனோடு சேர்ந்து தமிழ்ஈழம் எங்கள் ஈழம் என்போமடா என்று வான்முட்ட வாழ்த்துவோமாக! —ஈழவேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூசைக்குள் கரடி!

## அரசியல் மடல்

**அன்பு நண்பா,**

சில நாட்களாக மனம் நிம்மதியின்றி தடுமாறுகிறது; உள்ளத்தில் கவலைகள் அலைமோதுகின்றன; 'வாராது வந்துற்ற மாமணியை' தோற்போமோ என்ற கேள்வி இதயத்தை அரிக்கிறது; இரத்த நாளங்கள் ஒவ்வொன்றும் துடிதுடிக்கின்றன— ஏடுகளில் நாள்தோறும் வந்திடும் செய்திகளைப் படிக்கின்றபோது!

தமிழ் ஈழத்தந்தை— தமிழினத்தின் எழுஞாயிறு—தானைத்தலைவர்— நம்மையெல்லாம் ஆளாக்கி— நம் இயக்கத்தை இன்றைய எழுச்சி நிலைக்கு கொண்டுவந்திட்ட மூதறிஞர் செல்வா அவர்களின் உடல் நிலையடைந்துள்ள சீர்கேடு மாத்திரம் என் மன வேதனைக்குக் காரணம் அல்ல; தமிழ் சமுதாயத்தின் ஒற்றுமையை—ஐக்கியத்தை சிதறடித்திடவும்,இந்த இன ஒற்றுமையின் சின்னமாக விளங்குகின்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளே மீண்டும் கட்சிப் பூசல்களைத் தோற்றுவித்திடவும் ஒரு சில நச்சு மனத்தினர் திட்டமிட்டுச் செய்து வரும் நாசவேலைகளைப் பார்த்திடும்போது தான் என் மனக்கவலை இரட்டிப்படைகிறது.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக கட்சியரசியல் நடத்தி தமக்குள முட்டி மோதிக்கிடந்த ஈழத்தமிழினத்தார்—கட்சி கடந்த நிலையில் ஒன்றுபட்டார்—ஒரேயணியின்கீழ் ஒரே தலைமையின்கீழ்— ஒரே கொடியின்கீழ்— ஐந்தாண்டுகளுக்கு முன்னர்! ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு நமமில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு என்பதனை உணர்ந்து கூட்டணியமைத்தார்— கொள்கை வகுத்தார்— அக்கொள்கையின்கீழ் ஒன்றுபட்டார்—இனிக் குவலயம் மெச்சிட வாழ்வார்— என்று எண்ணிக் களித்து இறும்பூதெய்திக்கிடந்த தமிழுள்ளங்கள் அனைத்தும வேதனையில் வெய்துயிர்த்து துடிதுடிக்கின்றன இன்று— பொறுப்பில்லார் சில்லோரின் போக்கினைப் பார்த்திடும்போது!

1972ம் ஆண்டு மே 14ம் நாள் திருக்கோணமலையிலே கூட்டணி அமைந்திட்ட வேளையிலும்—அதன்பின்னல் கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ் இளைஞர்களின் இரததத்திலும், கண்ணீரிலும், வியர்வையிலும், இந்த ஒற்றுமை கட்டி வளர்க்கப்பட்டு வந்த போதும — கூட்டணியில் இணைந்தவர்கள் மனமகலந்து பேசி கொள்கை, இலட்சியங்களில் உடன்பாடு கண்டு, இயக்கங்களை நடத்திவந்த போதும் — எங்கேயிருக்கிறார்கள் என்பதே தெரியாது தமிழினத்தைப் பற்றியே அணுவளவும் சிந்திக்காது — தாமுண்டு தம் வயிற்றுப் பிழைப்புண்டு என்று இருந்தவர்கள் எல்லாம் இன்றைய தினம் 'தேர்தல் வருகிறது' என்று தெரிந்ததும், தமிழ் மக்கள் மனதிலேயிருந்து என்றோ அழிக்கப்பட்டுவிட்ட கட்சிகளின் பெயர்ப்பலகைகளுக்கு வர்ணம் தீட்டும் வேலையில் இறங்கியிருக்கிறார்கள்!

கட்சி அரசியல் கடந்த நிலையில் — அரசியல் வேறுபாடுகள் அழிந்த நிலையில் — தமிழ் இனம் உதயசூரியன் கொடியின்கீழ் ஒன்றுபட்டு தமிழ்ஈழத் தேசிய விடுதலை இயக்கமாக பரிணமித்துள்ள தமிழர் விடுதலைக கூட்டணியின் கீழ் பூரண நம்பிக்கையுடன் உழைத்து வருகையில் — கேவலம் தேர்தல் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு — பாராளுமன்றப் பதவி ஒன்றையே கண்ணுகக் கொண்டு—ஒருசில குட்டிச்சாத்தான்கள் மீண்டும் கட்சி கட்டிக்கொண்டு தமிழினத்தைக் கூறுபோட முயற்சிப்பதை தமிழ்மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள்!

ஈழத்தமிழினத்தின் முப்பதாண்டு கால அரசியல் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் —தமிழினத்தின் விடுதலை இயக்கத்தை 1944 முதல் 1947 வரை ஒன்றுபட்ட தமிழ் காங்கிரஸ் நடத்திவந்திருப்பதையும், 1949 முதல் 1972 வரை தமிழரசுக்கட்சி நடத்திவந்திருப்பதையும்—1972 மே 14ம் நாளிலிருந்து இன்று வரை தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரசும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும் இளைஞர் இயக்கங்களும், மொழிவழித் தொழிற்சங்கங்களும் இணைந்த தமிழ் தேசிய இயககமான தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்திவருவதையும் காணமுடியும்!

1972ம் ஆண்டு ஏற்பட்ட இந்த இன ஒற்றுமை — தமிழர் கூட்டணி — இலட்சிய அடிப்படையிலே ஏற்பட்டதே தவிர—தேர்தலுக்கு தொகுதிகளைப் பங்குபோடும் நோக்குடன் ஏற்பட்டதல்ல! தமிழ் இனம் உரிமையுடன் வாழவேண்டும்— சுதந்திரமாக வாழவேண்டும்—என்ற அடிப்படையில் ஏற்பட்டது தான் இந்த ஒற்றுமையாகும். இந்த ஒற்றுமை ஏற்பட்டபின்னர்தான் தமிழினத்துக்கு புதிய நம்பிக்கை பிறந்தது; எழுச்சி பிறந்தது; இதை உணராதவர்கள்—இதிலே பங்கு கொள்ளாதவர்கள் எல்லாம்—இன்றையதினம் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றிவைத்துள்ள அரசியல் தீயில் — தாமும் குளிர்காய முனைகிறார்கள்; அதுமுடியாதபட்சத்தில் கூட்டணியை உடைப்போம் என்று கொள்ளிக்கட்டையை தூக்கி மிரட்டப்பார்க்கிறார்கள். இந்த மிரட்டல்களுக்கெல்லாம் தமிழ் சமுதாயம் அஞ்சப் போவது இல்லை! தமிழன் ஒவ்வொருவரையும் அடையாளம் கண்டுவைத்திருக்கிறான்; கூட்டணிக்குள் இருக்கின்ற — கூட்டணிக்குள் நுழைய முயல்கின்ற ஒவ்வொரு சுயநலவாதியையும் தமிழன் இனம்புரிந்து வைத்திருக்கிறான்; உண்மையான தூய உள்ளத்துடன், பதவி ஆசைகளின்றி, சுயநல நோக்கம் கிஞ்சிற்றுமின்றி யார் யார் பணியாற்றி வந்திருக்கின்றனர்; யார் யார் பணியாற்றிவருகிறார்கள்; என்பதெல்லாம் தமிழினத்துக்கு நன்கு தெரியும் — எனவே தமிழ் சமுதாயம் ஒருபோதுமே ஏமாறப்போவது இல்லை!

1972ம் ஆண்டு தமிழர் கூட்டணி ஆரம்பமானபோது— அது கட்சிகளின் கூட்டமைப்பாகத்தான் தொடங்கியது என்றாலும்— கடந்த ஐந்தாண்டு வளர்ச்சியின்போது— கூட்டணிக்கென தனியானதோர் கொடியும், தேசிய கீதமும் ஏற்றுக்கொள்ளப்பட்டு— சுதந்திரத் தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வதொன்றே கூட்டணியின் மாற்ற முடியாத இறுதி இலட்சியமாக வட்டுக் கோட்டையில் நடைபெற்ற கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டின்போது கூட்டணியில் அங்கம் வகிக்கும் இ. தொ. கா. தவிர்ந்த அனைத்துக் கட்சிகளாலும் ஒரே மனதாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர்— கூட்டணி என்ற ஒரே ஒரு அமைப்பே தமிழினத்துக்கு இனி இருந்தால் போதும்— தனித்தனிக் கட்சிகளும் கொடிகளும் இனியும் தேவையில்லை— கூட்டணியொன்றே தமிழினத்தின் ஏகபோக இயக்கமாக— தேசிய விடுதலை இயக்கமாக விளங்கினல் போதும்— என்கிற கருத்து தமிழ் மக்களின் உள்ளங்களில் ஆழமாக வேர்விட்டு வளர்ந்து வருகிற இச் சமயத்தில்— சிவபூசை வேளையில் கரடி புகுந்ததுபோல —தேர்தலையே ஒரே குறிக்கோளாகக் கொண்ட சிலர் கட்சி அரசியல் பேசத் தொடங்கியிருப்பதும்—தமிழ் இளைஞர் பேரவையென்று தமிழ் இளைஞர்களின் கட்சி கடந்த அமைப்பாக ஓர் அமைப்பு செயற்பட்டு வரும்போது— கட்சி சார்பான இளைஞர் இயக்கங்களை உருவாக்கப்போவதாக கொக்கரிப்பதும்—தமிழ் சமுதாயத்திலே அக்கறை கொண்ட அனைவரது இதயங்களிலும் வேல் கொண்டு பாய்ச்சுவது போன்றதாகும்!

**இயக்கத்திஞல் தனக்கு என்ன இலாபம் என்று கணக்குப்போட்டுப் பார்த்து— இயக்கத்திலிருப்பதால் பா.உ. பதவி தனக்கு வந்து சேருமா என்று நோட்டம் விட்டுப் பார்த்து—அது கைகூடும் என்ருல் மட்டுமே இயக்கம்; இல்லாவிட்டால் வேறு அணி என்பவர்கள் நமக்குத் தேவையில்லை! தன்ஞல் கூட்டணிக்கு என்ன இலாபம் என்று கணக்குப் போட்டுப் பார்த்து கூட்டணியின் இலட்சிய வெற்றிக்காக தனது சொத்து சுகங்களையும், உடல் பொருள் ஆவியையும் அர்ப்பணிக்கக்கூடியவர்களே நமக்குத் தேவை; அப்படிப்பட்டவர்களே கூட்டணியின் வேட்பாளர்களாக நிறுத்தப்படவேண்டும்!**

தமிழர் விடுதலைக் கூட்டணியெனும்விருட்சத்தில் மக்களின் ஆதரவு எனும் பழம் பழுத்துக் கனிந்த நிலையில் இன்று இருக்கின்றது. இந்தப் பழத்தைப் பறித்து தின்னும் ஒரே குறிக்கோளுடனேயே பல வெளவால்கள் இன்று மரத்தை நோக்கி எங்கெங்கெல்லாமிருந்தோ பறந்து வருகின்றன; மரத்தை நட்டு—அதற்கு தனது இரத்தம், வியர்வை தண்ணீர் எனும் நீரூற்றி—தியாகம் எனும் எருவிட்டு வளர்த்து ஆடுகளும், மாடுகளும், எருமைகளும் மரத்தை அழித்துவிடாது பாது காத்து—எங்கு நோக்கினும் மக்கள் ஆதரவு எனும் பழம் மரத்தில் கனிந்தது கண்டு, உள்ளம கூத்தாட— அந்தப் பழத்தை இனவிடுதலைக்குப் பயன்படுத்திடும் நோக்குடன கூட்டணித் தொண்டனே காலத்துக்காக காத்திருக்கிறான்! பழங்களை சுயநலத்துக்காக கொத்த வரும் வெளவால்கள் யார் என்பதுகூட்டணித் தொண்டனுக்குத் தெரியும். அவன் அந்த வெளவால்களை விரட்டியடித்தே தீருவான் என்கிற அசையா நம்பிக்கை எனக்குண்டு.

**எங்கள் பகைவர்கள் எங்கோ மறைந்திட — ஈழத்தில் ஏற்பட்டுள்ள தமிழின ஒற்றுமை என்றைக்கும் நின்றுநிலைத்து சமுதாயத்துக்கு பயன் தந்திடவேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பு வெறும் சோத்திமரமாக—ஒட்டுக்கள் போடப்பட்ட போலித்தனமான அமைப்பாக இருக்காது — உண்மையான இறுக்கமான — கட்டுக்கோப்பான வைரம் பாய்ந்த அமைப்பாக இருக்கவேண்டும் தேர்தலுக்காக இந்த ஒற்றுமை உடையக்கூடாது; அதேவேளையில் ஒற்றுமை உடையக்கூடாது என்று கூறிக் கொண்டு, அதற்காக ஆழமான இலட்சியப்பற்றும் விசுவாசமும் இல்லாதவர்களை—இதுவரை இயக்கத்தின் பக்கமே தலைவைத்துப் படுக்காதவர்களை— தங்கள் சுயநல ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள கூட்டணிப் பக்கம் தலை நீட்டுபவர்களை இனம்கண்டு ஒதுக்கித் தள்ளவேண்டியதும்தமிழ்மக்களினதும் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவினதும் பொறுப்பாகும்!**

கட்சிகளைக் கலைத்துவிட்டு இன ஒற்றுமையை வளர்க்கவேண்டுமென்பதுதான் அமரர் ஜீ. ஜீ. யின் ஆசையாக இருந்தது—இதை பல தடவைகள் அவரே தம்மைச் சந்தித்தவர்களிடம் எடுத்துக்கூறியிருக்கிறார். ஆனல், அவரது பெயரைச் சொல்லி இன்றைக்கு சிலர் தங்கள் கட்சிகளுக்கு உயிரூட்ட முனைவது உண்மையில் அமரர் ஜீ. ஜீ.க்கு செய்யும் பாரிய துரோகமாகும்!

ஒவ்வொரு கட்சியும் இவ்வாறு கச்சை கட்டிக்கொண்டு தங்கள் தங்கள் கட்சிகளை வளர்க்கவும், தங்கள் கட்சிகளின் வாலிபர் இயக்கங்களை தொடங்கவும் ஆரம்பித்துவிட்டால், பின்னர் கூட்டணி என்னுகும்? இன ஒற்றுமைதான் என்னுகும்? மீண்டும் கட்சிகள் தம்முள் முட்டிமோதி பலப்பரீட்சை பார்க்கவேண்டிய நிலைதான் ஏற்படும்! இந்த நிலைமை ஏற்படுவதை தவிர்த்திடவும், ஒற்றுமையை உறுதிப்படுத்திடவும் உழைத்திட வேண்டியது ஒவ்வொருவரது கடமையுமாகும்!

உதட்டளவு ஒற்றுமை அல்ல நமக்குவேண்டியது- இலட்சிய அடிப்படையிலான ஒற்றுமையே நாம் வேண்டுவது; பொதுத் தேர்தலில் தொகுதிகளைப் பங்குபோடும் ஒற்றுமையல்ல நாம் கட்டி வளர்க்க விரும்புவது — தமிழ் ஈழத்துக்காக உயிரையும் தரக்கூடிய தூய்மையான ஒற்றுமையே நமக்குத் தேவை; சில பேருக்கு கால் மிக மொத்தமாக இருக்கும்; ஆனல் அந்தக் காலில் உணர்ச்சியும் உயிரும் இருக்காது; தொட்டுப் பார்த்தால் மரக்கட்டைபோல இருக்கும்— விசாரித்தால் யானைக்கால் நோயாக இருக்கும்; இத்தகைய யானைக்கால் ஒற்றுமை நமக்கு வேண்டாம்; ஆரோக்கியமான பலம் வாய்ந்த ஒற்றுமை நமக்கு வேண்டும். அத்தகைய இன ஒற்றுமையை உருவாக்க உழைத்திடுவது நம் ஒவ்வொருவர் கடமையுமாகும்.

உன் அன்பு தோழன்.

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# கட்டுப்பாடும் கட்டுக்கோப்பும்!

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எந்தெந்தத் தொகுதிக்கு யார் யாரைக் கூட்டணி வேட்பாளர்களாக நிறுத்துவதென்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களிடையே இன்றையதினம் சிற்சில கருதது வேறுபாடுகளும், அபிப்பிராய மோதல்களும் இருந்து வருவது உண்மைதான்.

இதை நாம் மூடிமறைக்க விரும்பவில்லை!

எந்த ஒரு ஜனநாயக அமைப்பிலும் இத்தகைய அபிப்பிராய சுதந்திரங்களுக்கு இடமுண்டு. எவருக்கும் தத்தம் அபிப்பிராயங்களை வெளிடவும், அதையொட்டிய கருத்துக்களை சீர்தூக்கி ஆராய்ந்திடவும், சுதந்திரம் உண்டு. ஆனால் பிரச்சினைகள் அலசி ஆராயப்பட்டு, ஒரு இறுதி முடிவு எடுக்கப்பட்டபின்னர் அந்த முடிவுக்கு அனைவரும் அமைந்து கட்டுப்பட்டு நடப்பதே ஜனநாயகத்திலுள்ள தனிப்பெரும் சிறப்பாகும்!

இந்த உண்மையை நன்கு உணர்ந்தவர்கள் கூட்டணி ஆதரவாளர்கள்; ஜனநாயகக் கருத்தில் நன்கு ஊறிவளர்ந்தவர்கள்; இத்தகைய ஜனநாயக அடிப்படையில் இயங்கிவரும் கூட்டணியில் — இறுதி முடிவு எடுக்கப்படுவதற்கு முன்பு ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளை வைத்துக்கொண்டு, அதனால் கூட்டணி சிதறிவிடப்போகிறது; உடைந்து முறிந்துவிடப் போகிறது, என்று யாராவது கணக்குப் போடுவார்களானால் அவர்கள் கணக்கு தப்புக்கணக்காகப் போகுமென்பதை இப்போதே கூறிவைக்க விரும்புகிறோம்.

தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரு பரந்த ஜனநாயக அமைப்பு; இந்த அமைப்பில் சர்வாதிகாரப்போக்குக்கு துளியும் இடமில்லை; எந்த ஒரு பிரச்சினையிலும், அப்பிரச்சினையையொட்டி இயக்கத்தின் நிர்வாகக் குழு கூடிப் பேசி ஒரு இறுதி முடிவுக்கு வருகின்றவரை — சுயேச்சையான அபிப்பிராயங்களை வெளியிட கூட்டணி ஆதரவாளனுக்கு உரிமையுண்டு. ஆனால் கூட்டணி இயக்கரீதியாக விவாதித்து எந்த ஒரு பிரச்சினையிலும் ஒரு இறுதி முடிவுக்கு வந்த பின்னர் அந்த முடிவை அனைவரும் ஏற்று அதற்குப் பணிந்து கட்டுப்பாட்டுடன் நடப்பதற்குப் பெயர்தான் கட்சி அல்லது இயக்கம். இந்தக்கட்டுக்கோப்பு இல்லாவிடின், ஓர் அமைப்பு ஒருபோதுமே இயங்கமுடியாது!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்தெரிவிலும் கூட்டணி ஆதரவாளர்களிடையே சிற்சில தொகுதிகளில் இன்று அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டுள்ளதை நாம் மறைக்கவுமில்லை; மறுக்கவுமில்லை; கூட்டணியின் வேட்பாளர் நியமன சபையும், நடவடிக்கைக்குழுவும்பொதுச்சபையும்வேட்பாளர் நியமனம்சம்பந்தமாக இறுதி முடிவு எதையும் இதுவரை எடுக்காத நிலையில்— அது சம்பந்தமாக தத்தம் அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு கூட்டணித்தொண்டர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் பூரண உரிமையுண்டு என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஆனால் எழுப்பப்படும் பிரச்சினைகளையெல்லாம் தீர அலசி ஆராய்ந்த பின்னர்—சரியாகவோ பிழையாகவோ கூட்டணியின் அதிகார பீடம் இறுதி முடிவை மேற்கொண்டு அதைப் பகிரங்கமாகப் பிரகடனப் படுத்திவிட்டால்—அந்த முடிவை ஏற்று அதற்குக் கட்டுப்பட்டு கூட்டணியின் வெற்றிக்காக அந்தரங்க சுத்தியுடன் செயற்படவேண்டியது ஒவ்வொரு கூட்டணித் தொண்டனினதும் நீங்காக் கடமையாகும்!

**இதற்குப் பெயர்தான் கட்டுப்பாடு! இதற்குப் பெயர்தான் கட்டுக்கோப்பு! இந்தக் கட்டுப்பாட்டையும், கட்டுக்கோப்பையும் ஒவ்வொரு கூட்டணித் தொண்டனும், தலைவனும் தனது உள்ளத்தில் ஆழமாகப் பதியவைத்துக் கொள்ளவேண்டும்!**

கூட்டணியின் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர், வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பவரின் தனிப்பட்ட குறைதிசயங்களும், சொந்தக் கோபதாபங்களும் நமது கண்களுக்குத்தெரியக் கூடாது; கூட்டணியும், உதயசூரியன் கொடியும், தமிழ் ஈழ விடுதலை என்ற இலட்சிய மமே நமது கண்களுக்குத்தெரிய வேண்டும்; கூட்டணியின் வெற்றியொன்றே நமது குறிக்கோள் எனக்கொண்டு உழைத்திடவேண்டும்!

யாரை நாம் விரும்புகிறோமோ—அவருக்கு கூட்டணி டிக்கட் கிடைக்கலாம்; அல்லது கிடைக்காமற்போகலாம்; நாம் விரும்பாதவர் கூட்டணி வேட்பாளராக சில வேளைகளில் போட்டியிடலாம் — ஆக, கூட்டணி உத்தியோகரீதியாக ஒரு முடிவை எடுத்து அதை அறிவித்த பின்னர் — அந்த முடிவு சரியாக இருந்தாலும் சரி அல்லது பிழையாக நமக்குத்தோன்றினாலும் சரி — நமக்குப் பிடித்ததாக இருந்தாலும் சரி—பிடிக்காததாக இருந்தாலும் சரி — அந்தமுடிவை ஏற்று, அதற்குக் கட்டுப்பட்டு, கூட்டணியின் வெற்றிக்காக அந்தரங்க சுத்தியுடன் தீவிரமாக உழைக்கவேண்டியது இயக்கப்பற்றும் இலட்சியப்பற்றும்கொண்ட எந்த ஒரு கூட்டணித் தொண்டனதும் கடமையாகும்.

இக் கடமையை கூட்டணித் தொண்டர்கள் ஒவ்வொருவரும் செய்வார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

# பிறந்தநாள் பிரார்த்தனை!

யாழ் மருத்துவ மனையில் அந்தப் புனிதத் திருமேனி 'அறிதுயில்' கொள்ளும் அந்தப் பதினாறும் நம்பர் அறையை—இரண்டு நாட்களாக தாயைத் தேடித் திரியும் சேய்போல சுற்றிச் சுற்றி வந்துவிட்டு இதை எழுதுகிறேன்—

ஒவ்வொரு முறையும் டாக்டர்கள் அந்த அறைக்குள்ளே சென்றுவிட்டுத் திரும்பும் போதெல்லாம்— அவாகளது வாயிலிருந்து இனிக்கும் சேதி வாராதோ— எங்கள் கவலை தீராதோ— என்கிற இதயத் துடிப்பு—

தமிழர் தலைமகன் வாய்திறந்தார்— தங்கத் தமிழை உச்சரித்தார் என்று அவர்கள் கூறவேண்டும் என்கிற ஆர்வப்பெருக்கு!

இறைவா கருணை காட்டாயோ— எங்கள் தந்தையை மீட்காயோ— இனத்தின் துயர் தனைப் போக்காயோ— இதயத்தின் அழுகுரல் கேட்காயோ— என்று ஆண்டவனை நோக்கி மானசீகமான பிரார்த்தனை!

குளிரூட்டப்பட்ட அந்த அறைக்குள் மூதறிஞர் செல்வா படுத்திருக்கிறார்!

இராமன் இருக்குமிடமே அயோத்தி என்பார்கள்—

தந்தை செல்வா இன்று குடி இருக்கும் அந்த வைத்தியசாலையின் குறித்த 16ம் இலக்க அறையே இன்றைக்கு நமது இயக்கக் கண்மணிகளுக்கு அயோத்தியாக காட்சி தருகிறது.

எந்த நேரமும் அந்த அறையின் முன்னால் மக்கள் வெள்ளம்!

அவர்களது கண்களிலே மௌனம் நிறைந்த கவலை! இதயத்திலே ஏக்கம்!

தந்தை செல்வாவின் திருமுகத்தை யாரும் அருகே சென்று பார்க்க முடியாது! இது டாக்டர்களின் அன்புக் கட்டளை!

ஆனாலும் புனிதமான இடத்துக்கு செல்லும் பக்தர்களைப்போல— பவித்திரமான அந்தத் தூய தலைவன் படுத்திருக்கும் அந்த அறையை சுற்றிச் சுற்றி வருவதிலே— அந்த அறை வாசலிலேயே அமர்ந்திருப்பதிலே—ஒரு ஆத்மீக திருப்தி! மனச்சுமை நீங்குவது போன்ற உணர்வு!

அந்த உணர்வுடன் சென்ற சனியும் ஞாயிறும் தந்தையின் உதட்டசைவு காண்பதற்காக அங்கேயே குடியிருந்தேன்!

நான் மட்டுமா? நல்ல உள்ளங்கள் பல அங்கே உள்ளூர விம்மி வெடித்து அழுது கொண்டிருக்கின்றன.

யாழகமும், தேனகமும், மலையகமும் மன்னாரும், திருமலையும், வன்னித் திருநாடும் இணைந்து ஓர் உருவமாகி அங்கே கண்ணீர் வடிக்கின்றன!

இந்த இணைப்பை தன்னுடைய இடைவிடா உழைப்பினால் ஏற்படுத்தியவர் அவர்!

சாதி பேதங்களை— மத வேறுபாடுகளை கடந்து தமிழர்கள் அங்கே தந்தை செல்வாவின் நலன் வேண்டிப் பிரார்த்தனை செய்கிறார்கள்—

இந்த ஒற்றுமை ஏற்படுவதற்கு மூலவித்தாக விளங்கியவர் அவர்!

நாடிழந்து, மொழியிழந்து, நாதியற்ற இனமாய் நலிந்திருந்த ஈழத் தமிழினத்தை தட்டியெழுப்பி— தடுமாற்றம் போக்கி— நேரிய பாதையை காட்டி— முப்பதாண்டுகளுக்கு மேலாக மூச்சு விடாமல் உழைத்துவந்த அத் தூய திருவுருவம் கண்களை மூடியபடி தமிழினத்தின் எதிர்காலம்பற்றி அங்கே கனவு கண்டுகொண்டிருக்கிறது!

கண்ணை இமை காப்பதுபோல்— கன்னித் தமிழணங்கை இமயம்போற் காத்துநிற்கும் எங்கள் பெரியவர்—அங்கே கண்களை மூடியபடி கடும்தவம் இருக்கிறார்!

தமிழனின் அறிவுக் கண்ணைத் திறந்து— அடிமை உணர்வை மாய்த்து—கெடுதல்கள் போக்கிட, வேண்டும்நமக்கு விடுதலை என வீர முழக்கமிட்டு வந்த வீரத்தின் திருவுருவம் அங்கே தனது ஆத்மீகப் பலத்தை பரீட்சித்துக் கொண்டிருக்கிறார்!

—அறிதுயில் [illegible] உணர்ந்த அந்த மூதறிஞர் பெருமகன் — பொற்காலம் கண்டிடப் புறப்பட்ட பேரறிஞர் — தந்தை செல்வா அங்கே தம்மை அடக்கித் தவஞ்செய்து வருகின்றார்!

இயக்கம் கண்டு— இருபத்தைந்து ஆண்டு காலமாக அதை வளர்தது—இனியில்லைப்பயம் —இருக்கின்றார் எம் இளம்பிள்ளைகள் — இளங்காளைகள்—அன்னவர் கண்டிடுவர் பொன்னிகர் தமிழ் ஈழம் என்ற எண்ணத்துடன் அந்தப் பொன்னவிர் மேனிப்பெரியவர் அறிதுயில் கொள்ளுகிறார்.

தள்ளாத வயதிலும்—ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்த நம் அருமைத்தலைவர் செல்வா அவர்கள் கடந்த எட்டு நாட்களாக சற்று ஓய்வெடுத்து வருகிறார்!

அவர் நினைவு இழந்துவிட்டார் என்கிறார்கள்!

நினைவு இழந்திருந்த நமக்கெல்லாம் நினைவு ஊட்டியவர் அவர்! அவருக்கா நினைவு தப்பும்?

அவர் இன்னும் அறிவு பெறவில்லையென்கிறார்கள்!

நமக்கெல்லாம் அறிவூட்டிய ஒளிவிளக்கு அவர் — அவருக்கா அறிவு தப்பும்?

வெளித்தோற்றத்திலே அவர் நினைவு இழந்தவராக -- அறிவு தப்பியவராக காணப்படடபோதிலும் — உள்ளே அவரது உள்ளொளி—அதாவது அவரது ஆத்மீக சக்தி—(will power)வலிமையுடன் இயங்கிக்கொண்டேயிருக்கும்!

மூக்குத் துவாரத்தினால் அவருக்கு உணவூட்டிக்கொண்டிருக்கிறார்கள்— ஆனால் வெறும் காற்றையே உணவாக உட்கொண்டு பலகாலம் வாழக்கூடிய தவ வலிமை மிக்கவர் அவர்!

போராட்டம் அவருக்குப் பிடித்தமான ஒன்று;போராடவே பிறந்தவர் அவர்! என்றும் போராடிக்கொண்டேயிருப்பவர் அவர்!

எந்தப்போராட்டத்திலும் இறுதிவெற்றியை அவரே இதுவரைபெற்று வந்திருப்பதை உலகு அறியும்!

இந்த இறுதிப் போராட்டத்திலும் வெற்றி அவருக்குத்தான்!

அல்ல அல்ல —அவருக்கல்ல — வெற்றி நமக்குத்தான்!

ஏனெனில் அவர் உயிர் வாழ்வது அவருக்காக அல்லவே! எமக்காகத்தானே!

அவரை எப்படியும் வாழவைத்து தமிழ் சமுதாயத்தின் கண்ணீரைத்துடைப்போமென டாக்டர்கள் பலர் ஓய்வு ஒழிச்சலின்றி 24மணி நேரமும் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்!

யாழ் மருத்துவமனை தாதிமார்கள் — பட்டுப் பூச்சிபோல பறந்து பறந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

உணவும், ஓய்வும் உறங்கலும் பின்னர்— உத்தமத் தலைவனின் உயிர் காப்பதே முதலில் —என்று ஓடியாடிப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்!

வைத்திய மனைச் சிப்பந்திகள் விறுவிறுப்புடன் பணியாற்றுகிறார்கள்!

தாயகத்தின் தலைவரை—தமிழ் ஈழத்தின் முதல்வரை— காக்கின்ற புனிதப் பணியிலே ஈடுபட்டுள்ள அவர்கள் ஒவ்வொருவரையும் தமிழினம் கையெடுத்து வணங்குகிறது!

இறைவனே! எல்லாம் வல்ல ஒருவனே! எங்கும் நிறைந்த மாசக்தியே!

நாளையதினம் நம் தலைவருக்கு 79 வயது நிறைவு பெறுகிறது— 80வது வயதில் காலடி எடுத்து வைக்கிறார்!

அவரைப் படைத்து— எம் துயர் துடைக்க அனுப்பிவைத்த பரம் பொருளே! கொஞ்சம் கருணைகாட்டு!

நாளையுடனாவது எம்மைச் சோதிப்பதை நிறுத்திவிடு!

எம் நாயகனுக்கு நீடித்த ஆயுளும், உடல் வலிவும், தெம்பும் திராணியும் கொடுத்திடு!

அவர் சிரித்தால்தான் தமிழ் ஈழம் சிரிக்கும்!

அவர் எழுந்தால்தான் தமிழ் ஈழமும் சிலிர்த்தெழும்!

ஈழத்தமிழினத்தை தாங்கிநிற்கும் இமயம் அவர்! அவர்போன்ற வேறொரு இமயம் எம்மிடம் இல்லையென்பது உனக்குத் தெரியாததல்ல!

இறைவா உன்னைப் பிரார்த்திக்கிறோம்— இதய மலர்களால் உன்திருவடிகளை அர்ச்சிக்கிறோம்'

எங்கள் தந்தையை இன்னும் பல்லாண்டு வாழவைப்பாய்!

அவருக்குப் புதிய தெம்பும் வலிவும் சேர்த்திடுவாய்!

இதுவே எமது இடைவிடாப் பிரார்த்தனை! (30-3-77 புதன் இதழின் மறுபிரசுரம்)

—கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளை நடாத்தும் சமூக சேவை வாரம்!

## 5ம் திகதி கோப்பாயில் ஆரம்பம்

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளையினர் சமூக நலசேவைத் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளனர். இத்திட்டத்தை கோப்பாய் கிராமத்தில் முதன் முதலாக அமுல் நடத்தவுள்ளனர். தமிழ் சமுதாயத்திலுள்ள பின்தங்கிய மக்களுக்கு உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கிராம சுத்திகரிப்பு, தையற்பயிற்சி, பிளாஸ்டிக் பைகள், லேஸ்கள் பின்னற்பயிற்சி கோழிவளர்ப்பு, நூல் நிலையம்தொடங்கல், ஆகிய 5 அம்சத்திட்டத்துடன் தமது பணியை இவர்கள் ஆரம்பிக்கின்றனர்.

5-4-77 முதல், 11-4-77 வரைகோப்பாய் கிராமத்தில் இத்திட்டத்தை செயற்படுத்தவுள்ளனர். இதிலே பங்குபற்ற விரும்பும்தொண்டர்கள். தமிழ் மகளிர் பேரவை சமூகநலத் திட்டம் மே/பா சுதந்திரன், 194 ஏ, பண்டாரநாயகா வீதி, கொழும்பு-12 எனும் முகவரிக்கு எழுதலாம்.

## தந்தை செல்வா வாழவேண்டும் என்பதே இந்து இளைஞர்களின் ஒரே பிரார்த்தனை!

'சைவம் வாழவேண்டுமானல் தமிழ் வாழவேண்டும், தமிழ் வாழவேண்டுமானல் தமிழுக்காக உழைக்கும் பெரியார்கள் நீடு வாழவேண்டும். உள்ளத்தில் உறுதியும், வாக்கிலும் செயலிலும் நேர்மையும், உயர்ந்த பண்பாடும், எதிர்காலத்தை முன் கூட்டியே அறியும் புலனும் தீர்க்கதரிசனமும் வாய்ந்த ஈழத் தமிழர் தலைவர் மூதறிஞர் செல்வநாயகம் அவர்கள் தள்ளாத இந்த வயதிலும் உறுதிப்பாடுடன் உழைத்து வருகிருர்கள். அவர் மேலும் பல ஆண்டுகள் வாழவேண்டும்— தமிழுக்காக, அதனல் சைவத்துக்காக உழைக்கவேண்டும். இதுவே இந்த நாட்டு இந்து இளைஞர்களின் உளப்பூர்வமான "பிரார்த்தனை"

இவ்வாறு இலங்கை இந்து இளைஞர்பேரவைத் தலைமைச் செயலாளர் திரு. க. சச்சிதானந்தன், மூதறிஞர் செல்வநாயகம் அவர்கள் உடல் நலம்பெற்று மீண்டும் நல்வாழ்வு வாழப் பிரார்த்திக்கும் இலங்கை இந்து இளைஞர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள இந்து இளைஞர் மன்றங்கள் அனைத்தும் மூதறிஞர் செல்வநாயகம் அவர்களின் உடல்நலம் பெறச் சைவக்கோவில்களில் பிரார்த்தனைகளை மேற்கொண்டுள்ளன. நாட்டின் பலபாகங்களிலும் உள்ள 64 இந்து இளைஞர் மன்றங்களுக்கும் இதையொட்டி இந்து இளைஞர்பேரவைத் தலைமைச்செயலாளர் சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளார்.

## நலன் வேண்டி...

—1-ம் பக்கத் தொடர்

களில் விசேட பிரார்த்தனைகள் பூசைகள் இடம்பெற்றன. இவற்றில் ஆங்காங்கேயுள்ள கூட்டணி பா.உ.க்கள், கூட்டணி பிரமுகர்கள், த. இ. பேரவையினர், த. மகளிர் பேரவையினர் உட்பட ஏராளமான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார்கோவில், கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் கோவில், கல்முனை தரவைச் சித்திவிநாயகர் ஆலயம், மதுரங்குளி ஸ்ரீமுருகன் ஆலயம் ஆகியவற்றில் ஆங்காங்குள்ள தமிழர் கூட்டணி ஆதரவாளர்கள் விசேட பூசைகளை பிரார்த்தனைகளையும் நடத்தினர்.

மன்னர் கோவிற்குளம் இந்து இளைஞர் மன்றத்தை சேர்ந்த சுமார் 300 இளைஞர்கள் திருக்கேதீஸ்வரத்தில் விசேட பூசையொன்றை நடத்தினர்.

முன்னேஸ்வரத்தில் இப்போது நடைபெற்றுவரும் சதசண்டிஹோமத்தின் போதும் தந்தை செல்வாவின் நலன்வேண்டி பிரார்த்தனை செய்யப்பட்டது. பருத்தித்துறையைச் சேர்ந்த ஆ. தேவராஜன் யாகத்தீயில் காணிக்கை செலுத்தி இப் பிரார்த்தனையை செய்தார்.

## வவுனியாவில் பிரார்த்தனை

தமிழ் ஈழத் தந்தை மூதறிஞர் செல்வா அவர்களுக்கு பூரண சுகம் வேண்டியும், நீண்டஆயுள் வேண்டியும் அவரது 80வது பிறந்த நாளாகிய 31ம் திகதி வவுனியாத் தொகுதி எங்கும் உள்ள கிராமங்களில் உள்ள இந்து கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசை ஆராதனைகள் நடைபெற்றன.

செட்டிகுளத்தில் உள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் பங்குக் குருவானவர் வண. பிதாஜேம்ஸ் பத்திநாதர் அவர்களினல் விசேட பூசை ஆராதனை நடைபெற்றது. அத்துடன் செட்டிகுளம் த. இ. பேரவையினல் இந்து ஆலயத்திலும் விசேட பூசை அர்ச்சனை நடைபெற்றது. சேமமடு பிள்ளையார் ஆலயத்திலும், புளியங்குளம் — கந்தசுவாமி ஆலயத்திலும், நெடுங்கேணி ஸ்ரீ வேலாயுத சுவாமி கோவிலிலும், பாவற்குளம் வாரிக்குட்டியூரிலும், வவுனியா நகரில் உள்ள ஆலயங்களிலும் பூசை ஆராதனைகள் நடைபெற்றன.

இதற்கான ஏற்பாடுகளை சகல த. இ. பேரவை தமிழ் மகளிர் பேரவைக் கிளைகளுடனும், அமைப்பாளர் திரு. த. ம. பீற்றர் பொன் கலண்ட் செய்திருந்தார்.

## ருகலையில் விசேட வழிபாடு

ருகலை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் எதிர் வரும் 3-4-77 ஞாயிற்றுக் கிழமை. காலை 10 மணிக்கு இலங்கை தொழிலாளர் கழகம் தந்தை செல்வாவின் நலன்வேண்டி விசேட பிரார்த்தனையும் பூசையும் நடத்துகிறது. இதில் அ. தங்கத்துரை பா. உ., சட்டத்தரணி மு. பரராசசிங்கம் இ. தொ. க. பிரமுகர் வ. ஆறுமுகநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். மலையகத் தமிழர்கள் யாவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு இ. தொ. கழகம் அழைக்கிறது.

## இ. தொ. கழகப் பொதுச் செயலாளர் வாழ்த்து!

"தந்தை செல்வா எல்லா நலனும் பெற்று, உடல்நலம் பெற்று இனத்துக்கு தொடர்ந்து வழிகாட்ட வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்—

—இவ்வாறு இ. தொ. கழகப் பொதுச் செயலாளர் சட்டத்தரணி மு. பரராசசிங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறுகிருர்.

## சொற்பொழிவு!

வெள்ளவத்தை உருத்திரமாவத்தையிலுள்ள தமிழ்ச்சங்க மண்டபத்தில் இன்று (3-4-77) மாலை 4-30 மணிக்கு திரு. கே. எஸ். நடராசா தலைமையில், "தமிழ் சிங்களமொழிகளிடையே உள்ள ஒற்றுமை — வேற்றுமை" பற்றி திரு. பி. எம். ஜெயராஜன் எம். ஏ. (கன்ராப்) பார் அட்லோ உரை நிகழ்த்துவார்.

## அஞ்சல் சங்கம் பிரார்த்தனை

31-3-77ல் அன்று எண்பதாவது வயதுக்கு அடி எடுத்து வைக்கும் ஈழத் தமிழ்பேசும் மக்களின் தன்னிகரற்ற தலைவரும், தமிழ் ஈழம் பெற்றெடுத்த தவப் புதல்வனுமாகிய தாங்கள், மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, தமிழ் மக்களை வழி நடாத்தி, சுதந்திரத் தமிழ் ஈழத்தின் ஒப்பற்ற தலைவனுக வரலாற்றில் இடம் பெறுதல் வேண்டுமென அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் மனமுவந்து வாழ்த்வதுடன், தாங்கள் மிக விரைவில் பூரணசுகம் பெற்று, மேலும் பலத்துடனும், தீரத்துடனும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்தை தொடர்ந்து நடாத்துவதற்கும், வழி நடத்துவதற்கும் பூரண சக்தியையும் பலத்தையும் தங்களுக்கு அளிக்குமாறு அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் இறைவனை இறைஞ்சுகின்றது.

இவ்வாறு மேற்படி சங்கச் செயலாளர் திரு. செ. அருச்சுனு வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையாகிறது

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் அதிர்ஷ்டலாபச் சீட்டு இப்பொழுது விற்பனையாகிறது. யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## கொழும்பில் விசேட பிரார்த்தனை

தந்தை செல்வாவின் 80வது பிறந்தநாளாகிய 31-3-77 வியாழக்கிழமையன்று மாலை 5.00 மணிக்கு வெள்ளவத்தை சம்மாங்கோடு ஸ்ரீமாணிக்கவிநாயகர் ஆலயத்தில், அப்பெருமகன் பூரண சுகமும் நீண்ட ஆயுளும் பெறவேண்டி விசேட பூசையையும் பிரார்த்தனையையும் நடைபெற்றது. த. இ. பேரவை, த. ம. பேரவை, அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் ஏனைய மொழிவழித் தொழிற்சங்கங்கள் இதில் கலந்துகொண்டன.

தந்தை செல்வா அவர்கள் பூரண குணமடையவும் நீண்ட ஆயுளைப்பெறவும் இறையருள் வேண்டி 26-3-77 சனிக்கிழமையன்று மாலை 6.00 மணிக்கு விசேட பூசையும், பிரார்த்தனையும் செட்டியார் தெரு, ஸ்ரீமுத்து விநயகர் ஆலயத்தில் நடத்தப்பட்டது.

கொழும்பு செட்டித்தெரு முத்துவிநயகர் ஆலயம் கப்பித்தாவத்தை பிள்ளையார்கோவில், கொட்டாஞ்சேனை ஸ்ரீமுத்துமாரியம்மன், கும்பனித்தெரு ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமிகோவில் கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசர் கோவில் ஆகியவற்றிலும் விசேட பிரார்த்தனைகள் அபிஷேகம், பூசை இடம்பெற்றன.


## இப்போது விற்பனையாகிறது!

தமிழேந்தல் ஈழவேந்தன் எழுதிய

**தமிழ்மண் காப்போம்! தாயகம் மீட்போம்**

3-ம் பதிப்பு

அதிக பக்கங்கள் — விலைரூபா ஒன்று மட்டுமே
நாவண்ணன் எழுதிய

**தமிழன் சிந்திய இரத்தம்**
விலை ரூபாய் 1-50 மட்டுமே.

● பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா.உ. எழுதிய

**தடுப்புக் காவலில் 10 நாள்கள்**

விலை ரூபா ஒன்றுமட்டுமே

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்

ராஜன் புத்தகசாலை
இல: 12 பஸ் நிலையம்
யாப்பாணம்

**'திருக்குறள் மணிகள்'**
(பொருட்பால்)

15 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக்கேட்டட் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் மீண்டும் ஜனநாயக மறுமலர்ச்சி!

## ஜனதா ஆட்சியில் எங்கும் புத்துணர்ச்சி!

**மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பூரண சுதந்திரம், ஜனநாயக உரிமைகள், பத்திரிகை சுதந்திரம், சுயேச்சையான நீதிபரிபாலனம் ஆகியவற்றுக்கு உத்தரவாதம் அளிப்பதென்றும், அவசரகால அடக்குமுறைச் சட்டங்களையும், நீதிவிசாரணையின்றி ஒருவரை சிறையில் தள்ளும் கொடிய 'மிசா' சட்டத்தையும் முற்று முழுதாக அகற்றுவதென்றும் இந்தியாவின் புதிய 'ஜனதா' அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இந்தியாவில் ஆரோக்கியமான ஜனநாயகம் நிலவச்செய்வதற்கு இவை அடிப்படையாக அமையும் என்று அரசியல் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.**

மக்களின் அடிப்படை சுதந்திரம், ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு, பத்திரிகை சுதந்திரம், அரசின் தலையீடற்ற சுயேச்சையான நீதி நிர்வாகம், அடக்குமுறைச்சட்டங்கள் அகற்றப்படுதல், சர்வாதிகார நடவடிக்கைகளை நீக்குதல் போன்ற சில உயர்ந்த தத்துவங்களை முன்வைத்தே ஜனதாகட்சி தனது தேர்தல் பிரசாரத்தை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. ஆட்சிக்கு வந்ததும், மேற்கண்ட உரிமைகளை நிலைநாட்ட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென்று இந்தியாவின் பதில் ஜனாதிபதிக்கூடாக இந்தியப் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்திலேயே ஜனதா கட்சி அறிவித்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்திரா அரசாங்கம் தனது சுயநலத்துக்காக நிறைவேற்றிய அரசியல் சட்டத் திருத்தங்களையெல்லாம் ரத்து செய்து, முன்பிருந்த நிலைக்கு அரசியல் சட்டத்தை மாற்றியமைக்கப்போவதாகவும் மொரார்ஜி தேசாயின் அரசு அறிவித்துள்ளது.

முப்பதாண்டுகளுக்கு பின்னர், முதல் தடவையாக காங்கிரஸ் ஆட்சியை நீக்கி மாற்று அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ள ஜனதா கட்சி ஜனநாயகத்தை பாதுகாப்பது ஒன்றையே தனது முதல் கடமையாக கொண்டுள்ளது. அரசியல் தலைவர்களையும் எதிர்க் கட்சிகளையும் இதுவரை பழிவாங்குவதற்கு இந்திரா அரசினால் பயன்படுத்தப்பட்டு வந்த 'மிசா' சட்டம் நீக்கப்பட்டுவிட்டது. 'மிசா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் அனைவரும் இப்போது விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். தடைசெய்யப்பட்டிருந்த அரசியல் இயக்கங்கள் அனைத்துக்கும் தடைநீக்கப்பட்டுவிட்டன. எந்த ஒரு அரசியல் இயக்கத்தையும் விசாரணையின்றி தடைசெய்யக்கூடாது என்பதே தனது கொள்கை என்று புதிய ஜனதா அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

புதிய அரசாங்கம் அமைப்பதிலே ஜனதா கட்சிக்கும் ஜெகஜீவன்ராம் கட்சிக்குமிடையே இருந்துவந்த 'பிச்சுப்பிடுங்கல்' ஜெயப்பிரகாஷ் நாராயணனின் தலையீட்டினால் தீர்த்து வைக்கப்பட்டு, மொரார்ஜி தேசாய் தலைமையில், 18 பேர் கொண்ட மந்திரி சபை அமைக்கப்பட்டு விட்டது. ஜகஜீவன்ராமுக்கு அதிமுக்கிய அமைச்சானபாதுகாப்பு அமைச்சு வழங்கப்பட்டிருக்கிறது. சிறையில் இருந்து கொண்டே போட்டியிட்டு இந்தியாவிலே மிக அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளால்— அதாவது மூன்று இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால்— வெற்றிபெற்ற ஜோர்ஜ் பெர்னாண்டஸ் போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்திரா காந்தியையே தோற்கடித்து புதிய சாதனைபுரிந்த ராஜ் நாராயண், சுகாதார குடும்பக்கட்டுப்பாட்டு அமைச்சராக பதவி ஏற்றுள்ளார். தீவிர வலதுசாரி என்று கருதப்படுபவரும் ஜனசங்கத்தைச்சேர்ந்தவருமான வாஜ்பாய் வெளிவிவகார அமைச்சராகவும், பிரபல சட்டநிபுணர் சாந்திபூஷண் சட்டத்துறை அமைச்சராகவும், ஏ. எம். பட்டேல் நிதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் நாட்டின் பா. ராமச்சந்திரன் அணுசக்தித்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆக— அமைச்சரவையின் பீடத்தை இன்று அலங்கரிப்பவர்களில் பலர் இந்திராவின் அடக்குமுறை ஆட்சியின்கீழ் சிறைச்சாலைகளில் இருந்தவர்களே. இந்திரா சிறையில் வைத்தவர்களை, இந்திய மக்கள் ஆட்சிக் கட்டிலில் உட்காரவைத்திருக்கிறார்கள்.

புதிய அரசாங்கம் இந்தியாவை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளை எப்படி சமாளிக்கப் போகிறது— அதன் வெளிநாட்டுறவுகள், வெளிநாட்டுக் கொள்கைகள் எவ்வாறு அமையப்போகின்றன என்பது பொறுத்திருந்துபார்க்க வேண்டிய விஷயங்களாகும்.

ஊழல்கள் அற்ற — நேர்மையான நிர்வாகத்துக்கும் ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கும் உறுதியளித்துள்ள புதிய பிரதமர் மொரார்ஜி தேசாய், அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டரின் வழியைப் பின்பற்றி அமைச்சர்களும், அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளும தமது சொத்து விபரங்களை பகிரங்கப்படுத்த வேண்டுமென்று அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மொரார்ஜி தேசாய் ஒழுக்கசீலர்; தார்மீக வாழ்க்கை நடத்திவருபவர்; கண்டிப்பும், கட்டுப்பாடும் உள்ளவர்; கடவுள் நம்பிக்கை நிறையப்பெற்றவர். ஊழல்களுக்கு அப்பாற்பட்டவர். அவரது தலைமையின் கீழ் இந்தியாவில் ஜனநாயகம் தழைக்கவும், இந்திய நாடு முன்னேறவும்வாழ்த்துகிறோம்.

# ஜனதா அரசுக்கு எம்ஜி ஆரின் நிபந்தனையற்ற ஆதரவு!

## புதிய சூழ்நிலை தமிழக அரசியலில் மாற்றத்தைக் கொண்டுவருமா?

**எம். ஜி, ஆரின் தலைமையிலுள்ள அ. இ. அண்ணா தி.மு.கவும், திராவிட முன்னேற்றக்கழகமும் இப்போது மொரார்ஜி தேசாய் தலைமையிலுள்ள மத்திய அரசாங்கத்தை ஆதரிக்கின்றன, ஜனதா அரசுக்கு நிபந்தனையற்று அண்ணா திமுக ஆதரவு தரும் என்று எம்.ஜி.ஆர். திடீரென அறிவித்துள்ளார். திமுக தலைவர் கருணாநிதி பொதுத்தேர்தலுக்கு முன்பிருந்தே ஜனதா அணியை ஆதரித்து வருவது தெரிந்ததே. இரண்டு திமு கழகங்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள இந்தப் புதிய ஒருமைப்பாடு, இரு திமு கழகங்களும் மீண்டும் ஒன்று சேருவதற்கு வித்திடுமா என்று கேள்வி தமிழ் நெஞ்சங்களில் எழுப்பப்படுகிறது.**

அண்மையில் நடந்து முடிந்த இந்தியப் பொதுத் தேர்தல் எதற்காக நடைபெற்றது? இப் பொதுத் தேர்தலில் அ. இ. அண்ணா திமுகவும், தி. மு. கழகமும் எந்தெந்த அணிகளை ஆதரித்து நின்றன? இதில் யார் ஆதரித்து நின்ற அணி வெற்றிபெற்றது என்ற கேள்விகளை ஆராயும்போது பின்வரும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

(1) நடைபெற்றது— இந்தியாவை ஆளுவது யார்— அல்லது எந்த அணி? இந்திரா காங்கிரசா? அல்லது ஜனதா அணியா என்பதற்கு விடை காண்பதற்கு உரிய பொதுத்தேர்தலாகும். இது அகில இந்திய ஆட்சியை தெரிவுசெய்வதற்காக நடைபெற்ற தேர்தலே தவிர —தமிழ்நாடு மாநில அரசை தெரிவுசெய்வதற்காக நடைபெற்ற தேர்தல் அல்ல.

(2) இத்தேர்தலில் — இந்திராகாந்தியே மீண்டும் ஆட்சிக்கு வருவார் — அல்லது அவரையே ஆட்சிக்கு வரச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் எம். ஜி. ஆரின் அ. இ. அ. திமுக இந்திரா காங்கிரசுடன் சேர்ந்து கூட்டணி அமைத்தது.

(3) திராவிட முன்னேற்றக் கழகமோ — இந்திரா ஆட்சி கவிழும்; எப்படியும் அதைக் கவிழ்த்தே தீர வேண்டும்; அப்போதுதான் இந்திய நாட்டில் ஜனநாயகம் தழைக்கும்; சர்வாதிகாரம் சாயும் என்ற நம்பிக்கையுடன் ஜனதா அணியுடன் கூட்டணி அமைத்தது.

(4) ஆக — இரு அணிகளாக பிரிந்துநின்று ஜனநாயகக் களத்தில் இந்திரா காங்கிரசும், ஜனதா கட்சியும் பொருதிய நேரத்தில் — இந்திரா அணியுடன் எம்.ஜி. ஆர் கட்சியும், ஜனதா அணியுடன் திமுகவும் சேர்ந்து நின்றன.

(5) பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான இந்திய மக்கள் அளித்த தீர்ப்பின்படி பிரதமர் இந்திரா காந்தியுட்பட இந்திரா காங்கிரஸ் ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டது; ஜனதாகட்சி ஆட்சிபீடம் ஏறியது—அதாவது எம். ஜி. ஆரின் அ. இ. அண்ணா திமுக ஆதரித்த அணி ஆட்சிக் கட்டிலில் இருந்து வெளியேற்றப்பட்டது; திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்த ஜனதா அணியே ஆட்சிக்கட்டிலில் ஏறியது.

(6) மேற்படி கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது உண்மையில் அரசியல் சித்தாந்த அடிப்படையில் வெற்றிபெற்றது திராவிட முன்னேற்றக் கழகமே தவிர — எம். ஜி. ஆரின் அ. இ. அண்ணா திமுக அல்ல;

(7) தமிழ்நாடு மாநிலத்தில் மட்டுமல்ல— தென் மாநிலங்கள் அனைத்திலுமே இந்திரா காங்கிரஸ் கூட்டணியே பெருவாரியான வெற்றிபெற்றிருக்கின்றன. இதற்குக் காரணம்— இந்திரா காந்தியே ஆட்சிக்கு வருவார் என்று தென் மாநிலங்கள் முழு நம்பிக்கை கொண்டிருந்ததுதான்! இந்த அடிப்படையில் பார்க்கும்போது—தமிழ் நாட்டிலும் அந்த நம்பிக்கையே இருந்திருக்கிறது. அதன் காரணமாகவே இந்திரா காங்கிரஸ்— அ.இ.அ. திமுக கூட்டணி தமிழ் நாட்டில் பெரு வெற்றியீட்ட முடிந்தது.

(8) பொதுத் தேர்தல் முடிவடைந்து, மொரார்ஜி தேசாயின் தலைமையில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதும் புதிய அரசுக்கு அ.இ.அ. திமுக நிபந்தனையற்ற ஆதரவு வழங்கப் போவதாக அ.இ.அ. திமுக தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அறிவித்திருப்பது- திமுக தலைவர் கலைஞர் கருணாநிதி பொதுத் தேர்தலின்போது கொண்டிருந்த அரசியல் சிந்தனையை பொதுத் தேர்தலின் பின்னர் எம்.ஜி.ஆர். அவர்களும் ஏற்றுக்கொண்டு விட்டார் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

(9) மொரார்ஜி தேசாய் தலைமையிலுள்ள ஜனதா

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானைத்தலைவா! தந்தை செல்வா

## மோனம் கலைந்து முழுநிலவாய் எழுந்திடுவாய்!

அண்ணல்காந்தியின் அடியொற்றி நடைபோடும் அகிம்சாமூர்த்தியே தந்தை செல்வா! சாதாரண மனிதராகப் பிறந்து கடின உழைப்பால் — விடாமுயற்சியால்— உயர்ந்த இலட்சியங்களால்- ஆழமான கருத்துக்களால்— சிந்திக்கவைக்கும் சீரிய எழுத்துக்களால் — கற்றறிந்தோர்கூட்டத்தையே கவர்ந்திழுக்கும் கன்னற்றமிழ்ப் பேச்சால்—கொண்ட கொள்கைகளிலிருந்து இம்மியளவும் வழுவாத கொள்கைப் பற்றுல் — மாற்றுரின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கும் மாண்பால்—சரித்திர மனிதனுக—வரலாறு கண்ட வண்டமிழ்ச்சிங்கமாக— சிலம்புச் செல்வர் ம. பொ. சி. கூறிய ‘சரித்திரத்தை உருப்போடுவோர் பலர்; ஆனல் சரித்திரத்தை உருவாக்குவோர் ஒரு சிலரே’ என்ற மணியான வாசகத்தை மெய்ப்பித்துக் கொண்டு, ஈழம்வாழ்தமிழ்ப் பேசுமினம் தனது கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றைப் பாதுகாத்துக் கொண்டு குடியுரிமை, கொடியுரிமை, வாக்குரிமை, நிலவுரிமை ஆதியாம் உரிமைகளைப் பெற்று ஏனைய இனங்களுடன் சரிநிகர் சமானமாகத் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காகக் கடந்த கால்நூற்ருண்டுகாலமாக, ஓயாது ஒளியாது, அல்லும் பகலும் அயராது உழைத்து ஓடாகிப் போன உங்களது 80வது பிறந்த நாள் விழாவை ஈழத் தமிழினம் உங்கள் நலம் வேண்டும் பிரார்த்தனை நாளாக அனுட்டித்தது.

சகலவல்லமையும்பொருந்திய அரசாங்கங்களை எதிர்த்து, உரிமைகோரி நிராயுதபாணியாக, அறத்தின் துணையுடன் போராடிய தங்கள் வச்சிரஉள்ளத்தைப்பாராட்டாத சிங்களத் தலைவர்களே இல்லையென்று கூறின் மிகையாகாது. எங்கும் தமிழ்— எதிலும் தமிழ் என்ற நிலை உருவாகும்வண்ணம் உழைத்தனல் இன்று வைத்திய சாலையில் ஒய்வுபெறும் தங்களுக்கு நீண்ட ஆயுள் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்,

### கொள்கைக் கோமானே

உங்களுக்கே உரித்தான பாரம்பரியமிக்க உயர்ந்த இலட்சியங்களையும்,மேலான குறிக்கோள்களையும் கொண்டு சுதந்திர இலங்கையின் முதலாவதுபொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடி நாடாளுமன்றம் சென்ற நீங்கள், அங்கே உங்கள் இயக்கத்தின் தலைவரும், மற்றும் சில உறுப்பினர்களும் கொண்ட கொள்கைகளை மறந்து செயற்பட்டதோடல்லாது படுபாதகமான சில சட்டங்களை ஆதரித்து வாக்களித்தமையையும் கண்டு பொங்கியெழுந்து இயக்கத்தினின்றும் வெளியேறிய துணிச்சல்தான் என்னே? அந்நேரம் தாங்கள் அள்ளிவீசிய அழகு தமிழ் வார்த்தைகள் சாசாவரம் பெற்றவை என்பனை

இந்நேரம் சகல தலைவர்களும் உணர்ந்து செயற்படுவதை எண்ணி உள்ளூரப் பெருமையடைகிறேன். கொண்ட கொள்கைகளே பெரிதென எண்ணிச் சுகபோக வாழ்க்கையை உதறித்தள்ளிய உத்தமனே — கொள்கைக்குன்றே உன் புகழ் வாழி!

### தமிழரசின் வைர மணித்தூண்

தமிழன் தமிழனுக — தன்மானம் மிக்கவனுக—யாரையும் சுரண்டாது—யாராலும் சுரண்டப்படாது தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதையே குறிக்கோளாகக்கொண்ட நீங்கள் தமிழ்க் காங்கிரஸ் என்ற இயக்கத்தினின்றும் நீங்கியதும் உங்கள் ஆரம்பகால இலட்சியங்களையும், கொள்கைகளையும் கொண்டே தமிழரசு என்ற மாபெரும் இயக்கத்தை உருவாக்கியமை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்ருகும். ஆரம்பகாலத்தில் காங்கிரசோடு எதிர்நீச்சலடித்த நீங்கள்,இன்ரூ தமிழினத்தின் ஏக இயக்கமாக மாறிய தமிழரசை இளைய தலைமுறையினரின் கரங்களிலே ஒப்படைத்துள்ளமை சாலப் பொருத்தமானது. அதிலும் தரமான தலைவனின் நிர்வாகத்தில் தமிழரசு வீறுநடை போடுவதற்கு தாங்களே காரண கர்த்தா என்பதை நினைத்து ஈழத்தமிழினம் புளகாங்கிதமடைகிறது. மாபெரும் இயக்கமாகிய தமிழரசின் வைரமாமணித்தூண் எனத்திகழும் தாங்கள் என்றுமே தமிழரசைத் தாங்கிக்கொள்வீர்கள் என்பதில் ஈழத்தமிழினம் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறது.

சாதிமத, பிரதேசக் கூப்பாடுகளுக்குச் செயலாலே சவுக்கடி கொடுத்த இணையற்ற தலைவா!

தமிழரசுக் கட்சியை உருவாக்கிய நீங்கள் கட்சியின் அமைப்பு விதிகளில் ஒன்ருக சாதி, மத பேதமற்ற சோசலிச சமுதாயத்தை நிறுவுதல் என்ற திட்டத்தை முன்மொழிந்தமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்ருகும். மேட்டுக் குடியில் பிறந்து வளர்ந்த நீங்கள், சமுதாயத்தின் அடிமட்டக்குடிகள் எனக் கணிக்கப்படும் தமிழ் மக்களது இல்லங்களுக்குச்சென்று சமபந்திபோசனம் அருந்தியது, சகல இந்துமத கோவிற் கதவுகளையும் சகல மக்களதும் வழிபாட்டிற்குகந்த வகையில் திறந்துவிட முயற்சித்து வெற்றி பெற்றமையும், ஓரடியாய் ஈரடியாய் ஒவ்வொன்றும் பொன்னடியாய் எடுத்துவைத்து காடு, மேடு, காட்டாறு, கடந்து ஈழத்தமிழகத்தின் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று பிரதேச வேறுபாடுகளைக்களைந்தெறிந்துவெற்றிவாகை சூடியமையும் மற்றைய இயக்கங்களின் எந்தத்தலைவனதும் [illegible]

தில் கிடையாது என்பதைத் துணிந்து கூறலாம்.

### புதியதோர் பரணி பாடிய வீரத்தளபதி

ஈழத்தமிழினத்தின் உரிமைகளைப் பறித்தெடுத்திடுவதில் தீவிரமாய் நின்ற சிங்கள அரசாங்கம் ஈற்றில் மொழி உரிமையில் கை வைத்தபோது சீறி எழுந்து நாடாளுமன்றத்திற்கு எதிரே காலிமுகத்திடலின் பசும் புற்றரையிலே கத்தியின்றி ரத்தமின்றி சத்தியத்தின் பேரால் கலிங்கத்துப் பரணிபாடி, மண்டையுடைந்து செங்குருதிகொட்டிச் செங்களம் சமைத்து ஈழத்தமிழகத்திற்கு விறல் வேந்தனுக மீண்ட செம்மலே! உன் புகழ் சொல்லியோ, எழுதியோ முடிவடையாது. அது எப்போதும் தொடர்கதைதான்.

### இன்றைய இளந்தலைவர்களின் இணையற்ற பேராசான்

இன்று தமிழரசுக் கட்சியின் தன்மானத் தலைவனுக தகைசால் தலைவனுக — தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபராகசிங்களஆட்சி கண்டு நடுங்கும் சிங்கேருகத் திகழும் நாவலர் அமிர்தலிங்கம், நாடாளுமன்றத்தில் மாற்ருரின் கேள்விக்கணைகளைத் தவிடு பொடியாக்கி நயமான பதில் அளிக்கும் உடுவில் சிங்கம் தருமலிங்கம், உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன், தமிழினத்திற்கு உள்ள குறைகளைச்சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி உலக மக்களின் அனுதாபத்தை திரட்டுவதில் கைதேர்ந்த புலியான கடமைவீரன் நவம், மாவை சேனுதிராசா, போன்ற உன்னத தலைவர்களின் பேராசானே! அவர்களது உயர்ச்சிக்கு வித்திட்ட தலைவனுக இருந்தும் இன்றுவரை ஓய்வு பெற்றுக்கொள்ளாது இயன்றதைச்செய்து இன்புற்றிடும் மாண்பு மிகு தலைவா! இன்னும் ஆயிரமாயிரம் தரமான தலைவர்களை உருவாக்கி, ஈழத் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்பதைக்கண்டு களித்திடப் பல்லாண்டு வாழி!

### கூட்டணி கண்ட கூர்மதியாளன்

1970ம் ஆண்டு அரசு கட்டிலேறிய அரசாங்கம், சிங்கள பௌத்த ஜனநாயக சோசலிச அரசாங்கமாகச் செயற்படத் தொடங்கியதுடன் தமிழினம் இந்நாட்டில் இல்லை என்பதுபோல் நடக்கவும் தலைப்பட்டது. அதனுல் 22 வருடமாக எதிரும் புதிருமாக இருந்த தமிழ்க் காங்கிரஸ், இ. தொ.கா.போன்ற அனைத்துத்தமிழர் இயக்கங்களையும் ஒன்றுசேர்த்து மாபெரும் கூட்டணியை உருவாக்கிய உங்களுக்கு [illegible]

ஒய்வுபெற முடியாமல் செய்துவிட்ட தமிழினம் உங்களுக்குப் பின்னல் எந்நேரமும் ஆயத்தமாக — உங்கள் சுட்டுவிரல் அசைவை நோக்கிக் காத்திருக்கிறது. ஈழம் வாழ் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் "உதயசூரியனுக ஒளி வீசிக்கொண்டிருக்கும் நீங்கள் கூட்டணி என்ற மாபெரும் இயக்கத்தின் சின்னமாக உதயசூரியனையே தேர்ந்தெடுத்திருப்பது சாலவும் பொருந்தும்.

### ஓட்டு முறையால் பதில் கொடுத்த விறல்வேந்தே.

‘இலங்கை குடியரசாக்கப்பட்டது முறையற்றது. ஆகையால் நான் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கிறேன். நீங்கள் உங்கள் கொள்கையடிப்படையில் அது சரியெனக்கூறின், அக்கொள்கையடிப்படையில் என்னுடன் போட்டியிட்டு வென்ருல் நான் அரசியலிலிருந்து விலகிக்கொள்கிறேன்’ எனச் சவால்விட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து, அரசு ஆதரவாளரோடு நேரடியாகப் போட்டியிட்டு, அறம்பிழைத்த அரசின் தலைநொருங்க, தருக்கு நொருங்க வோட்டு முறையால் பதிலடி கொடுத்து வெற்றிவாகை சூடிய வீரச்சிங்கமே! உனது சவால் சரித்திரத்தில் ஈழவள நாட்டில் எப்போதாவது நடைபெற்றதா? இல்லவே இல்லை.

### வரலாற்று நாயகனே வாழி பல்லாண்டு!

நாடு, இனம், கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றின் ஆக்கத்திற்கும், சிறப்பிற்குமாக உயர்ந்த இலட்சியத்துடன் சலியாதுழைக்கும் திறன் மிக்கோராகவும், மாட்சிமை தங்கிய மகாராணியாரால் சுட்டி மதிக்கப்பெற்ற சட்ட நூற் சதுரராகவும், நுண்மாணுழை புலமும், நிறை சொற்றிருவும் மிக்க வித்தகத்திறன் மிகு நியாய துரந்தராகவும், ஜனநாயக சோசலிச வாதியாகவும் சத்தியம், சமத்துவம், அகிம்சை ஆகிய அணிகலன்களைப் பூண்டு ஈழவளநாட்டின் இருபெரும் இனங்களிடையே ஐக்கியம் ஏற்பட அயராது உழைக்கும் அண்ணலாகவும், தள்ளாடும் உடலாயினும் தளராத விடுதலைத்தாகம் கொண்டு தீவிரமாய் இயங்கும் தலைவனுகவும், வெஞ்சிறையிருந்தேனும் அன்னை தமிழின் அடிமை விலங்கொடிப்பேன் என்று சிங்கநாதம் செய்யும் செந்தமிழ்த் தளபதியாகவும், ஏழைப்

### பொன்கை-வாணன்

பாட்டாளிகளின் கூட்டாளியாகவும், தமிழினம் பெற்ற தனித்தவப் புதல்வனுகவும் விளங்கும் நீங்கள் ஈழத்தமிழினத்தின் இதயத்தில் இமயம் போன்றுள்ளீர்கள். தனிச் சிறப்புடன் எம் உள்ளத்து உச்சிமீது வீற்றிருக்கும் உங்களுக்கு கட்புலனுகும் சிலை எதுவும் எவ்வகையிலும் ஈடாகா ஆகையால் எம் உள்ளம் உங்களுக்கே என்றும் கோவிலாகுக!

தமிழ்க் கிழவா! தானைத் தலைவா! தமிழினத்தின் காவலனே! ஈழத்தமிழினத்தின் எழு ஞாயிறே! என்றென்றும் தலைவணங்காத் தமிழ் ஏறே! சீர்சால் அறிவும் வலிவும் பொலிவும் பெற்று மீண்டும் எழுந்து வந்து எமக்கு வழி காட்டு!

### இறவாத் தலைவர்!

தள்ளாடும் நடை உடையார் — என்றும்
தள்ளாடாக் கொள்கை உடையார்
மெள்ள மெள்ள நடந்து செல்வார் — வற்ருத
வெள்ள மெனும் கொள்கை உடையார்
துள்ளி வரு புலிதனையும் — அவர்
அள்ளி அணைத்திடுவார்
எள்ளுக்குள் எண்ணெயைப்போல் — தமிழர்
உள்ளத்தில் இருப்பவராம்.

கொள்கைக்குக் குன்று அவர் — தமிழர்
கூட்டத்தின் கொம்பன் அவர்
உள்ளத்தால் அவர் இளைஞன் — நல்ல
உணர்வினல் முது கிழவன்
சுள்ளிபோல் உடல் உடையார் — என்றும்
துவளாத நெறியுடையார்
தெள்ளு தமிழ்தனையே — உலகில்
தெய்வம் என மதிப்பார்.

செல்வத்துக்கு நாயகமாம் — ஆனல்
செலவுக்குப் பணமில்லையாம்
செல்வமெல்லாம் தமிழ் ஈழமாம் — அவரின்
தேட்டமெல்லாம் தமிழருக்காம்
நல்லவர் பெரியவராம் — அழியா
நாணயம் உள்ளவராம்
எல்லாத் தமிழருக்கும் — உலகில்
இறவாத் தலைவர் அவராம்.

—சோமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனதா ஆட்...

—6-ம் பக்கத் தொடர்

அரசாங்கத்தை இரு திராவிட முன்னேற்றக் கழகங்களும் ஆதரிக்கின்ற புதிய அரசியல் சூழ்நிலை இப்போது உருவாகியுள்ளதால், இரு திமுகழகங்களையும் மீண்டும் இணைத்து வைக்கும் முயற்சியில் ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்ற பெருந் தலைவர்கள் இறங்கினல் இப்போது காரியம் கைகூடக் கூடும்.

(10) இந்தியப் பொதுத் தேர்தலின்போது, தமிழ் நாட்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்குகளின் தொகை ஒரு கோடியே 64 இலட்சத்து 81,015 இதில் அ. இ. அண்ணு திமுக 54,63,741 வாக்குகளையும், திமுக 32,26,054 வாக்குகளையும் பெற்றுள்ளன. அதாவது இரு தி.மு.கழகங்களுமாக மொத்தம் 86,89,795 வாக்குகளை பெற்றுள்ளன.—அதாவது தமிழ்நாட்டில் பதிவான மொத்த வாக்குகளில் அரைவாசிக்கு மேற்பட்ட வாக்குகளை இரு தி.மு. கழகங்களும் கூட்டு மொத்தமாக பெற்றுள்ளன.

(11) இரண்டு தி. மு. கழகங்களும், இரு வேறு அணிகளாக பிரிந்து நில்லாது ஒரேயணியாக நின்ருல்—தமிழ்நாட்டில் மீண்டும் ஒரு பொற்காலம் ஏற்படுவது உறுதி, இக்கனவு நனவாகுமா?

—ஈழதாசன்

## குமரிப் பெண்...

— 1ம் பக்கத்தொடர்

குறித்த பெண்ணையும் ஐந்து வாலிபர்களையும் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்வதற்காக பேருந்து நிலையத்தில் பொலிசார் விலங்குடன் வைத்திருந்தபோது சாரிசாரியாக வந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் இவர்களின் திருமுகங்களைப் பார்த்து ரசித்தனர். முன்பு சுதந்திரக்கட்சி தலைமைப்பீடம் செய்த அதே பாணியில் சில குறும்புக்கார வாலிபர்கள் பட்டாசு கொழுத்தி பஸ்நிலையத்தில் இவர்களுக்கு பாராட்டுத் தெரிவித்தனர். தலைமறைவாகி உள்ள 'செயல்வீரர்' வெளிப்படும்வரை ஏனையோர் விளக்க மறியலில் வைக்கப்படவேண்டும் என்று நீதிமன்றம் பணித்துள்ளது. எது எவ்வாருனாலும் அமைப்பாளர் தலையிட்டு குறித்த வாலிபர்களுக்கு அபயம் அளிக்கக் கூடும் என சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

கிளிநொச்சியில்
சுவைமிகு உணவுகள்
உண்டுகளித்து
இன்புற
நாடுங்கள்

**சிவாஸ் கபே**

கண்டி வீதி,
கிளிநொச்சி.

**வெளிவந்துவிட்டது**

இன்றே வாங்கி பாவியுங்கள்சிவா இண்டஸ்ட்ரிஸின் மற்றும் பல தயாரிப்புகளான:-

றேயல் ஜெலி கிறிஸ்டல்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் பேக்கிங் பவுடர்
றேயல் கோன் பிளவர்
றேயல் நீலம்

தயாரிப்பாளர்கள் விநியோகஸ்தர்கள்

**சிவா இண்டஸ்ட்ரிஸ்**

112 - 1/3 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

**செல்லமகால்** 3-வது வாரம்

முத்துராமன், சுஜாதா, ஸ்ரீகாந்த், பத்மப்ரியா, சுருளிராஜன், மனோரமா, ஜெயச்சந்திரன், எம். என். ராஜம், பானுமதி நடித்த

எஸ். எஸ். கே. பிலிம்ஸாரின்

**வாழ்ந்து காட்டுகிறேன்**

**றெக்சி** — டவுண் பஸ்

**றீகல்** [மட்டுநகர்] — இதயக்கனி

**கெயிட்டி**

சிவாஜி, பத்மினி, கே. ஆர். விஜயா நடித்த—

**இரு மலர்கள்**

**கிறவுண்**

ஆனந்தன், குமாரி சச்சு, அசோகன் நடித்த—

**வீரத் திருமகன்**

(புத்தம் புதிய கொப்பி)

**கிங்ஸ்லி**

முத்துராமன், பாலாஜி, விஜயகுமாரி நடித்த-

**பொலிஸ்காரன் மகள்**

**வெலிங்டன்** (யாழ்நகர்)

முத்துராமன், சுஜாதா, பத்மப்ரியா, சுருளிராஜன், மனோரமா, ஜெயச்சந்திரன் எம்.என். ராஜம், பானுமதி நடித்த-

**வாழ்ந்துகாட்டுகிறேன்**

17-வது வாரம்

**கெப்பிட்டல் - விஜயா** (மட்டுநகர்)

எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா, ஜெ
[இரு வேடங்களில்]
சந்திரகலா நடித்த-

**உலகம் சுற்றும் வாலிபன்**

(ஈஸ்ட்மன் கலர்)

**பிளாசா**

சிவாஜி, சாவித்திரி, மேஜர் சுந்தரராஜன் நடித்த-

**நவராத்திரி**

விரைவில்

**மனிதனும் தெய்வமாகலாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1977-ம் வருடம் ஏப்ரல் மாதம் 3-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.